திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சங்கரன் கோவிலில் தொற்று நோய்ப்பிரிவு என்று ஒரு கட்டிடம் இருந்து செயல்படவேயில்லை. அங்கு எக்ஸ்ரே பிரிவில் பிலிம்கள் இல்லாமலே எக்ஸ்ரே எடுக்க சிரமப்படுவதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்ல, ஆப்பரேஷன் செய்வதுகூட சங்கரன்கோவிலில் போதுமான அளவிற்கு செயல்படவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே சங்கரன் கோவிலின் சுற்று வட்டாரங்களில் ஏழை எளிய மக்கள் சாதாரண மக்கள் இருப்பதால், அதற்கான விசேஷ ஏற்பாடாக முன்னுரிமை கொடுத்து, அதை நடத்துவதற்காக மறு பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேஜர் ஆப்பரேஷன் அங்கு செய்வது 45, ஒரு ஆண்டுக்கு மைனர் ஆப்பரேஷன் 110-ஆக அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கின்றன. எக்ஸ்ரே பிரிவும் அங்கு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஆறு மாதத்திற்கு முன்பு பிலிம்கள் இல்லை. ஒட்டு மொத்தமாக உதகையிலே நடைபெற்ற ஸ்ட்ரைக்கைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்த ஸ்ட்ரைக் எப்படி எல்லாம் நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அதன் விளைவாக நமக்கு பிலிம்கள் கிடைக்கவில்லை. இப்போது பிரச்சினை இல்லை.

கீரனூர் அரசு மருத்துவ மனையை விரிவுப்படுத்தும் திட்டம்

*343 (வினா எண். 19887) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குளத்தூர் தொகுதியில் உள்ள கீரனூர் அரசு மருத்துவ மனையைக் கூடுதல் படுக்கை வசதியுடன் விரிவுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; இல்லை.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீரனூர் நகரத்தில் கூடுதல் படுக்கை வசதி இல்லை என்று சொன்னார்கள். இப்போது அரசு மருத்துவ மனை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதே நிலையில் தான் இருக்கிறது. ஆனால் மக்கட்தொகை எந்த அளவிற்கு அதிகரித்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். கீரனூர் தாலுக்கா செண்டர். அங்கே பல பள்ளிகள் அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள், இப்போது அங்கே பிரசவ வசதி இல்லை. மாவட்ட வளர்ச்சி

மன்றக் கூட்டத்திலே தீர்மானம் கொடுத்துபேசப்பட்டிருக்கிறது. எனவே தயவு கூர்ந்து அரசு மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி நியாயமாக இருந்தாலும், நிதிவசதிகளுக்கேற்ப அந்தப் பிரச்சினை கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள குடிசைப்பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான யூனிசெப் நிறுவனத்தின் உதவி.

*344 (வினா எண் 20823) திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1983 மே மாதத்தில் சென்னை குடிசைப் பகுதிகளுக்கு யூனிசெப் உதவி பற்றி ஒப்பந்தம் ஆகியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எவ்வளவு உதவி கிடைக்கும்?

(ஈ) எவ்வித பணிகளுக்குச் செலவழிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பராமரிப்பிலுள்ள குடியிருப்புத் திட்டங்களில் வசித்து வரும் மக்களும் வாரியத்தால் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களும் சேர்ந்து சுமார் 50,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு யூனிசெப் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இந்தப் பகுதி மக்களுக்கு சுற்றுப்புறச்சுகாதாரம், மருத்துவம், கல்வி வேலை வாய்ப்பு, சத்துணவு போன்ற வசதிகள் பெறவும் இவ்வாரியம் ஏற்கனவே பல்வேறு திட்டங்களின்கீழ் அமைத்துக் கொடுத்துள்ள சாலைகள், கழிவறைகள் போன்ற வசதிகளை குடிசை வாழ் மக்களே அரசு அல்லது மாநகராட்சியின் உதவியின்றி பராமரித்துக்கொள்ளவும், அவர்கள் இதற்குரிய நிலையை அடைய தக்க பயிற்சி ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இத்திட்டத்தில் செய்ய இருக்கும் பணிகளில் சில கீழ்வருமாறு:—

(1) பள்ளிகளில் இருந்து இடையிலே நின்றுவிட்ட இளஞ் சிறார்களுக்கு கல்வி பயில வாய்ப்பளித்தல்.